ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத₃ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸத₃ா ஹ்ருதி₃ ॥

குலசேகரப்பெருமாள் அருளிச்செய்த

# ॥ வன்தாளினிணை ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iittam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ வன்தாளினிணை ॥

தனயன் கான் புகத் தசரதன் புலம்பல்

‡வன் தாளின் இணை வணங்கி வள நகரம்
    தொழுதேத்த⋆ மன்னன் ஆவான்
நின்றாயை⋆ அரி அணை மேல் இருந்தாயை⋆
    நெடுங்கானம் படரப் போகு
என்றாள்⋆ எம் இராமாவோ⋆ உனைப் பயந்த
    கைகேசி தன் சொற் கேட்டு⋆
நன்றாக நானிலத்தை ஆள்வித்தேன்⋆
    நன்மகனே! உன்னை நானே (1)

வெவ் வாயேன் வெவ்வுரை கேட்டு⋆ இரு நிலத்தை
    வேண்டாதே விரைந்து⋆ வென்றி
மை வாய களிறொழிந்து தேர் ஒழிந்து
    மா ஒழிந்து⋆ வனமே மேவி⋆
நெய் வாய வேல் நெடுங்கண்⋆ நேர் இழையும்
    இளங்கோவும் பின்பு போக⋆
எவ்வாறு நடந்தனை எம் இராமாவோ!⋆
    எம் பெருமான்! என் செய்கேனே (2)

கொல் அணை வேல் வரி நெடுங்கண்⋆ கௌசலை தன்
    குல மதலாய்! குனி வில் ஏந்தும்⋆
மல் அணைந்த வரைத் தோளா⋆ வல் வினையேன்
    மனம் உருக்கும் வகையே கற்றாய்⋆
மெல் அணை மேல் முன் துயின்றாய்⋆ இன்றினிப் போய்
    வியன் கான மரத்தின் நீழல்⋆
கல் அணை மேல் கண் துயிலக் கற்றனையோ⋆
    காகுத்தா! கரிய கோவே (3)

www.prapatti.com

வா போகு வா இன்னம் வந்தொரு கால்
    கண்டு போ⋆ மலராள் கூந்தல்⋆
வேய் போலும் எழில் தோளி தன் பொருட்டா⋆
    விடையோன் தன் வில்லைச் செற்றாய்⋆
மா போகு நெடுங்கானம் வல்வினையேன்⋆
    மனம் உருக்கும் மகனே!⋆ இன்று
நீ போக என் நெஞ்சம்⋆ இரு பிளவாய்ப்
    போகாதே நிற்கு மாறே (4)

பொருந்தார் கை வேல் நுதி போல் பரல் பாய⋆
    மெல் அடிக்கள் குருதி சோர⋆
விரும்பாத கான் விரும்பி வெயில் உறைப்ப⋆
    வெம் பசி நோய் கூர⋆ இன்று
பெரும் பாவியேன் மகனே! போகின்றாய்⋆
    கேகயர் கோன் மகளாய்ப் பெற்ற⋆
அரும் பாவி சொற் கேட்ட அரு வினையேன்⋆
    என் செய்கேன்! அந்தோ! யானே (5)

அம்மா! என்றுகந்தழைக்கும் ஆர்வச் சொல்
    கேளாதே⋆ அணி சேர் மார்வம்⋆
என் மார்வத்திடை அழுந்தத் தழுவாதே⋆
    முழுசாதே மோவாதுச்சி⋆
கைம்மாவின் நடை அன்ன மென்னடையும்⋆
    கமலம் போல் முகமும் காணாது⋆
எம்மானை என் மகனை இழந்திட்ட⋆
    இழி தகையேன் இருக்கின்றேனே (6)

பூ மருவு நறுங்குஞ்சி புன் சடையாப்
    புனைந்து⋆ பூந் துகில் சேர் அல்குல்⋆
காமர் எழில் விழல் உடுத்துக் கலன் அணியாது⋆
    அங்கங்கள் அழகு மாறி⋆
ஏ மரு தோள் என் புதல்வன்⋆ யான் இன்று
    செலத்தக்க வனம் தான் சேர்தல்⋆



www.prapatti.com

தூ மறையீர் இது தகவோ⋆ சுமந்திரனே!
வசிட்டனே! சொல்லீர் நீரே (7)

பொன் பெற்றார் எழில் வேதப் புதல்வனையும்⋆
தம்பியையும் பூவை போலும்⋆
மின் பற்றா நுண்மருங்குல்⋆ மெல்லியல் என்
மருகியையும் வனத்தில் போக்கி⋆
நின் பற்றா நின் மகன் மேல் பழி விளைத்திட்டு⋆
என்னையும் நீள் வானில் போக்க⋆
என் பெற்றாய் கைகேசீ⋆ இரு நிலத்தில்
இனிதாக இருக்கின்றாயே (8)

முன் ஒருநாள் மழுவாளி சிலை வாங்கி⋆
அவன் தவத்தை முற்றும் செற்றாய்⋆
உன்னையும் உன் அருமையையும் உன்மோயின்
வருத்தமும்⋆ ஒன்றாகக் கொள்ளாது⋆
என்னையும் என் மெய்யுரையும் மெய்யாகக்
கொண்டு⋆ வனம் புக்க எந்தாய்⋆
நின்னையே மகனாகப் பெறப் பெறுவேன்⋆
ஏழ் பிறப்பும் நெடுந் தோள் வேந்தே (9)

தேனகு மா மலர்க் கூந்தல் கௌசலையும்⋆
சுமித்திரையும் சிந்தை நோவ⋆
கூன் உருவின் கொடுந்தொழுத்தை சொற் கேட்ட⋆
கொடியவள் தன் சொற் கொண்டு⋆ இன்று
கானகமே மிக விரும்பி⋆ நீ துறந்த
வள நகரைத் துறந்து⋆ நானும்
வானகமே மிக விரும்பிப் போகின்றேன்⋆
மனு குலத்தார் தங்கள் கோவே (10)

‡ஏரார்ந்த கரு நெடுமால் இராமனாய்⋆
வனம் புக்க அதனுக்காற்றாத்⋆
தாரார்ந்த தடவரைத் தோள் தயரதன் தான்
புலம்பிய⋆ அப்புலம்பல் தன்னை⋆

கூரார்ந்த வேல் வலவன் கோழியர் கோன்⋆
குடைக் குலசேகரன் சொற் செய்த⋆
சீரார்ந்த தமிழ் மாலை இவை வல்லார்⋆
தீ நெறிக்கண் செல்லார் தாமே (11)

॥ குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com